# எல்லோர்க்கும் இனியவன்

## அமரர். அருமைக்குட்டி கணேசமூர்த்தி

# அவர்களின் நினைவு மலர்



பணிலம்
110/2 பழைய மின்சார நிலைய வீதி,
நற்பிட்டிமுனை-03, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத் தலைவனாய்

எல்லோர்க்கும் நல்லவனாய்

தந்தையாய்.. தமையனாய்

தாத்தாவாய்

உறவுகளின் உறவாய்

நண்பனாய்...

சினங்காணா பெருமகனாய்..

அன்பு காட்டி...

அரவணைத்து.. ஆதரித்து

வாழ்வாங்கு வாழ்ந்த

அமரர் அருமைக்குட்டி கணேசமூர்த்தி

நினைவாக இந்நூலை

அவரின் பொற்பாத கமலங்களில்

சமர்ப்பணம் செய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். அருமைக்குட்டி கணேசமூர்த்தி

( ஓய்வுநிலை சுகாதார கல்வி அதிகாரி HEO)



மலர்வு:
12-10-1941

உதிர்வு:
21-10-2021

திதி வெண்பா

பேர்மிகு பிலவ வருட ஐப்பசி இருபத்தியோரராம் நாள்
அருளுடை அபரபட்ச பிரதமை திதியதனில்
கருணையாளன் கணேசமூர்த்தி இறைவன்
திருமலரடி சேர்ந்தார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் நமசிவாய

பஞ்ச புராணம்.

திருச்சிற்றம்பலம்



**தேவாரம்**

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வதுநின்னருள் மெய்யினையே

கற்றவர் காய்வது காமனையே
கயல்விழி காய்வது காமனையே

அற்றம் மறைப்பதும் உன் பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே

பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே

**திருவாசகம்**

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே

மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப் பாதமிரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன்னாட்டுடையான் படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்துவெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இடர்கெடுத்தென்னை ஆண்டுகொண்டென்னுள்
இருட்பிழம்பு அறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
துயநற் சோதியுள் சோதி
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமை
படரொளி பரப்பி பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்ற
தார்பெறு வார உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
ஊமைமண் வாளனுக்காக
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

தண்ணளி வெண்குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர் கண்மழை பொழிந்தார் வானவர் பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழலிடைமேல்
விண்ணவர்கள் தொழ நின்றார் வீதிவிடங்கப்பொருமான்.

## திருப்புகழ்

நாடித் தேடி தொழுவார்பால்
நானதாக திரிவேனோ
மாடற் கூடல் பதிஞான
வாழ்வை சேர தருவாயே
பாட காதல் புரிவோனே
பாலைத் தேனோத் தருள்வோனே
ஆடற் தோகைக் கினியோனே
ஆனைக்காவில் பெருமாளே

## வாழி

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அருமைக்குட்டி கணேசமூர்த்தியின் வாழ்க்கைத் தடங்கள்

எல்லோருக்கும் ஓர் இறப்புண்டு. அப்படியே எல்லோருக்கும் ஓர் இறுதிப் படுக்கை உண்டு கருவறை துறந்து தாய்மடியில் தொடங்கிய பயணம் இடுகாடு நோக்கிய இறுதிப்பயணத்தில் முற்றுப்புள்ளி வைக்கும். இஃதே மனித வாழக்கையின் சுற்றுவட்டம்.

ஒருவரது வாழ்வு அவன் எப்படி சாவான் என்பதை கட்டியம் கூறிநிற்குமோ என்னவோ ஆனால் ஒருவனது மரணம்..அந்த நிகழ்வு. அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை கோடிட்டுக் காட்டி நிற்கும். அவரது இழப்பானது் அவர் வாழ்ந்த குடும்பத்தில் அவரது உறவுகளில்.. சுற்றத்தில் சூழலில் எத்தகைய தாக்கங்களை இடைவெளிகளை ஏற்படுத்தி நிற்கின்றது என்பது அவருக்கான இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் பரிணமித்து நிற்கும்.

அந்த கோடிட்ட வாழ்வை..அப்படி ஒரு பரிணமிப்பை வாழ்ந்து மறைந்த அமரர் கணேசமூர்த்தியின் பிறப்பிடம் பாண்டிருப்பு எனும் பெரும்பதி ஆகும்.அருமைக்குட்டி தங்கப்பொன் தம்பதியினரினருக்கு இரண்டாவது மகன்.அண்ணன் ஏரம்பமூர்த்தி அவர்கள்.

கல்முனை பாத்திமா கல்லூரியில் உயர்வகுப்பு வரை கல்வி கற்றார். முதலில் இரத்த பரிசோதகராக பாலமுனை வைத்தியசாலையில் நியமனம் பெற்றார். பின்னர் சுகாதாரத்துறையில் பொதுச்சுகாதார பரிசோதகராக பதவி வகித்தார்.பாலமுனை கல்முனை பட்டின சபை நிந்தவூர் மட்டக்களப்பு போன்ற இடங்களில் பணியாற்றிய பின்னர் சுகாதார பரிசோதகர்களுக்கான போதனாசிரியராக - கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றார்.ஆங்கிலத்தில் மிகுந்த தேர்ச்சியுடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பிட்டிமுனையின் புகழ்பூத்த பரம்பரையினரான இந்து வேளாள வன்னிமை குடும்பத்தை சேர்ந்த சேதுபதிப்பிள்ளை மனோன்மணியம்மா அவர்களின் இரண்டாவது மகளான கமலாதேவியுடன் திருமண பந்தத்தில் 1973 ம் ஆண்டு தை மாதம் 27 ம் திகதி இணைந்து கொண்டார். இறையருளால் சுரேனுதா பார்த்தீபன் துவாரகா ஆகிய மூன்று மக்களைப் பெற்று இல்லறவாழ்வின் இனிமையை.. அதன் வசந்தத்தை வாழ்வில் பெற்று வாழ்வாங்கு வாழந்தார். அன்பு மருமக்களாக முறையே துஸ்யந்தன் முத்தழகி அருண் ஆகியோரையும் மானசிகா, லக்சாந், லகஷிதா, தார்மீகன் அகிய நான்கு பேரப்பிள்ளைகளையும் பெற்று வாழ்வின் சகல செளபாக்கியங்களும் குறைவின்றி நிறைவானதொரு வாழ்க்கை வாழ்ந்தார்.

இளமைக்காலங்களில் இவரிடமிருந்த இலக்கிய ஆர்வம் காரணமாக பல ஆக்கங்களை எழுதியிருந்தபோதும் தன்னை வெளியே பலமான ஒரு இலக்கிய வாதியாக காட்டிக்கொள்ளாமலிருந்தது இவரது தன்னடக்கம் என்றுதான் சொல்லவேண்டும்.

கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினாக இருந்து அதன் இலக்கிய முயற்சிகளுக்கு தன்னாலியன்ற பங்களிப்புக்களை செய்தவர். இவரது சமகால இலக்கிய கர்த்தாக்களான கவிஞர் சண்முகம் சிவலிங்கம், கவிஞர் நீலாவணன், பேராசிரியர் எம்.நு்.மான், கவிஞரும் சட்டத்தரணியுமான முத்துமீரான், தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் (செங்கதிரோன்), கவிஞர் சடாட்சரன், கவிஞர் கல்லூரன் ஆகியோருடன் நெருங்கிய நட்புடன் பழகியவர்.

இலங்கையில் புகழ்பெற்ற பாண்டிருப்பு ஸ்ரீதிரௌபதை அம்மன் ஆலய உற்சவத்தினை முன்னிட்டு இவர் எழுதிய முழுப்பக்க கட்டுரை ஒன்று தினகரன் பத்திரிகையில் அந்த நாட்களில் பிரசுரிக்கப்பட்டமை இவரது எழுத்தின் சிறப்பினை வெளிக்கொணர்ந்தது. சிறு சஞ்சிகைகள் பலவற்றில் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. கவிதைகள் எழுதும் ஆர்வம் மிக்கவராக இருந்தபோதிலும் அவற்றை பத்திரிகைகளுக்கு பிரசுரத்திற்காக அனுப்புவதில் இவருக்கிருந்த அக்கறையீனம் அவர் ஓர் இலக்கியவாதி என்பதை வெளியுலகிற்கு வெளிப்படாமல் செய்தது என்றே கூறல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்த தொழில்ரீதியான - அலுவலகங்களில் நன்மதிப்பை பெற்றிருந்த ஓர் அதிகாரியாக புகழ்பெற்ற இலக்கியவாதிகளின் நண்பனாக மட்டுமன்றி சமூகசேவை ஆன்மீகம் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்தியிருந்தார்.

இளமைக்காலங்களில் உதைபந்தாட்டத்தில் பெரும் நாட்டம் கொண்டிருந்த கணேசமூர்த்தி அவர்கள் அன்றையநாட்களில் கல்முனையின் பிரபல உதைபந்தாட்ட கழகங்களிடையே போட்டிகளை நடாத்துவதில் மத்தியஸ்தர்களான திலகன், கோபால் மாஸ்ரர் ஆகியோருடன் இணைந்து செயல்பட்டார். கூடவே அந்த போட்டிகளுக்கான விளம்பரத்தை ஊர் ஊராக ஒலிபெருக்கிமூலம் தனது மதுரக்குரல் மூலம் விளம்பரப்படுத்துவதில் கடுமையாக உழைத்தார்.

சமூக சேவையை பொறுத்தமட்டில் நற்பிட்டிமுனை முதலாம் பிரிவின் கிராமோதய சபைத்தலைவாரகவும் அம்பாரை மாவட்ட தமிழ் கல்வி கலாசார பேரவையின் நிர்வாக உறுப்பினராகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கல்முனைக் கிளையின் நிர்வாக சபை உறுப்பினராகவும் பணியாற்றினார்.அரச சார்பற்ற நிறுவனமாயிருந்த கதிர்ப்பு சமூக சேவை நிறுவனத்தின் தலைவராக இருந்த காலகட்டத்தில் ஜேர்மன் தூதுவராலயத்தின் அனுசரணையில் பல செயல்திட்டங்களை முன்னெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

சுனாமி அனர்த்தத்தின் பின்னரான கால கட்டங்களில் சுகாதார சேவைகளில் TEDA, PSL ஆகிய அரச சார்பற்ற நிறவனங்களில் இணைந்து பணியாற்றினார். பல வெளிநாட்டு பிரதிநிதிகளின் வருகைகளின்போது அவர்களுக்கு சிறந்த ஒரு மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றினார்.இவரது ஆங்கிலப் புலமை மேலும் பல அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மொழிபெயர்ப்பாளராக பணியாற்ற பல சந்தர்ப்பங்களை ஈட்டிக்கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக சேவையிலும் நாட்டங்கொண்டு நற்பிட்டிமுனை ஸ்ரீமஹாவிஷ்ணு ஆலய பரிபாலனசபைத் தலைவராகவும் பணியாற்றியிருந்தார்.கூடவே கல்முனைத் தொகுதி இந்து மாமன்றத்திலும் நிர்வாக உறுப்பினராக பதவி வகித்தவராவார்.

இத்தனை சிறப்புக்களுடன் வாழ்ந்த அமரர் கணேசமூர்த்தி அவர்களின் தனிப்பட்ட குணாம்சங்கள் என்பன எல்லோராலும் எளிதில் பின்பற்ற முடியாதவை என்றுதான் கூறவேண்டும்.தனது குடும்பத்தார் சுற்றத்தார் அனைவரினதும் அன்பை பெற்றவர்.இவர்கலந்து கொள்கின்ற குடும்ப நிகழ்வுகளில் இவரது நகைச்சுவையான பேச்சும் கலகலப்பும் சிரிப்புமழைகளும் சகஜமானவையாகும். ஏனெனில் எவரது மனதையும் புண்படுத்தாத.. எவர்மீதும் கடுஞ்சினங்கொண்டு வார்த்தைகளை எல்லைமீறி பேசாத ஒருவராகவே இறுதி மூச்சுவரை வாழ்ந்தார். இந்த ஒரு பண்பே அவருக்கு ஏராளமான நண்பர்கள் சேர வழிவகுத்தது.

இவர் இருக்குமிடத்தில் கலகலப்பு இருக்கும். நகைச்சுவையாக பேசி தன்னுடன் இருப்போரை சிரிக்க வைப்பதில் கைதேர்ந்த ஒருவர். எல்லோருக்கும் நல்லவனாய் இனியவனாய் சினமென்பதே அறியாத மனித நேயனாய் வாழ்ந்த அமரர் கணேசமூர்த்தியின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்வின் நாதனே!

இன்று வரையிலும்
என் விழிகள் சொரியும் கண்ணீரின்
ஒவ்வொரு துளிகளிலும்
உங்கள் பெயரும் உருவமும்
இருக்கிறதே.

அந்த இறுதிக் கணங்களின்போது
என் விழிகளை உற்று நோக்கி
நீண்ட நேரம் பதிந்திருந்ததே
உங்கள் பார்வை.

இதுவரை பார்த்த
பார்வைகளிலிருந்தும்
வேறு விதமாய் அது!.
அதுவே எனக்கான
உங்களுடைய இறுதிப்பார்வை என்பது
எனக்கு தெரியாமல் போனதே
ஓர் ஆசீர்வாதமான சீவியத்தில்
உங்களுடன் நான் இணைந்திருந்தேன்.
பிள்ளைகளுக்கான உங்களது அர்ப்பணிப்பு
மௌனமாகவேயிருந்தும்...
சில கணங்களில் ஆரோக்கியமாகவும்
வெளிப்பட்ட என்னுடனான
உங்களது நேசம் - நமது
இல்வாழ்வின் இலக்கணங்கள் இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமே கண்ணீரை கண்டிராத உங்கள் விழிகள்
எல்லோரையும் மகிழ்விக்கின்ற கலகலப்பு
பிள்ளைகளை உணர்ந்து
நீங்கள் கொடுத்த அளவற்ற செல்வம்.

அனைத்தும் கரைந்து நீங்கள்
அந்திமச் சுவாசம் விட்ட கணம்.
உள்ளம் கலங்கி உணர்விழந்து
உடைந்தே போனேன்
என்னைத்தேற்ற எவராலும் முடியாதுதான்.

இருந்தும் நமது பிள்ளைச்செல்வங்களின்
அவர்களது வாரிசுகளின்... முகங்களை

என்கண்களிலிருந்து நீங்கள் பார்த்து
ஆசீர்வதித்து நில்லுங்கள்.
என் விழிமூடி உங்கள் அயல் வந்து நான்
சேரும்வரையில்
உங்கள் நினைவதுவே எந்தனது வாழ்க்கையாகும்.

அன்புத் துணைவியார்

**திருமதி. கமலாதேவி கணேசமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா...!

எப்படி அப்பா என்னை விட்டுப் போனீர்கள்?
இன்னுந்தான் என்னால் நம்பவே முடியவில்லை.

உங்கள் இறுதிக் கணங்களில்..
உங்கள் இறுதி நாடித்துடிப்பில்
உங்களோடு இருந்தவள் நான்...

எவரையும் சிரமப் படுத்த விரும்பாத நீங்கள்
என்னையும் சிரமப்படுத்த வேண்டாமென
நினைத்தா பிரிந்தீர்கள்...

வீட்டில் அம்மா என்கணவர் மகள்
இவர்களுடன் ஒன்றாக நீங்கள்
வாழ்ந்திருந்த பேறு எமக்கு
வாய்த்ததே ஒரு தெய்வீகம்.எங்கள்
வாழ்வின் பலமே நீங்கள்தான் அப்பா!

என் கணவரை மருமகனாக அன்றி
மகனாகவே கருதினீர்கள்
நீங்கள் நோயுற்றிருந்த வேளை
மட்டுநகர் கொழும்பு என
உங்களுடனே வந்து இரவு பகல் கூடவே
இருந்து பணிவிடைகள் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்வில்
பண்பை பாசத்தை பரிவை
பகிர்ந்தளிப்பது
எவ்வாறென எங்களுக்கு உணர்த்தியவர்
நீங்கள்.

முடியவில்லை என்னால்!
அழுது கண்ணீர் வற்றி மீண்டும்
அழுகின்றேன்.

எங்கள் மகளின் உங்கள் பேத்தியின்
சிறப்பை கண்குளிர
சீருடன் பார்ப்பீர்களென நினைத்தோம்

அன்று ஒரு நாள் மூர்ச்சித்து நின்று
மீண்டும் முகமலர்ந்து எழுந்தீர்கள்.
பிறந்தநாள் கொண்டாடினோம்
பெரு மகிழ்ச்சி அடைந்தோம்.

மீண்டும் அது போல்
எழுந்திருப்பீர்கள் என நினைத்தோம்.
எங்களை ஏமாற்றி
இறுதிச் சுவாசம் விட்டடீர்கள்.

அப்பா! கண்ணீரில் தோய்த்தெடுத்த
எந்தன் இதயத்தை
உங்கள் பாதமலரில் சமர்ப்பிக்கின்றேன்.
கடவுளாக எம்மோடு இருந்து
எம்மை ஆசிர்வதிப்பீர்கள் அப்பா.

**மகள் சுரேனுதா**

**மருமகன் துஷ்யந்தன் பேத்தி மானசிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா ஆ ஆ ஆ ஆ....!

நீங்கள் தோளின் மேல் தூக்கிவளர்த்த
உங்கள் பிள்ளை
தொலைதூரம் வந்து கிடக்கிறேன்.
புத்திரனாய் எனையீன்றதன் அர்த்தமான
புத்திரக்கடமையை ஆற்றாத துயரில் நான்

இறுதியாய் உங்களை
இந்தியாவில் சந்தித்த
கணங்களை நினைத்துப் பார்க்கிறேன்.
அவை இன்றுமே பசுமையாய்
என் நெஞ்சில் நீள்கிறது.
எங்களது வாழ்க்கையின் ஏற்றங்களை
எங்களுக்கான விருப்பங்களின் சுதந்திரத்தை
ஏற்று நீங்கள் எம்மை ஆசிர்வதித்த போது
தெய்வமாய் உங்களை வணங்கினேன்.

அம்மாவின் அன்பும் கருணையும்
அரவணைப்பும் ஏன் கூடவே கண்டிப்புக்களும்
உங்களது விட்டுக்கொடுப்பும்
சிரிப்புக்கலவையில் நீங்கள் தந்த செல்லமும்
பிள்ளைகளான நாங்கள் பெற்ற பெறும் பேறு.

உருவத்தில் உங்கள் தோளளவு நான்
உயர்ந்த பருவத்தில்
எனக்கு நீங்கள் உற்ற தோழன்.
என் தவறுகளை நாசுக்காய்
நகைச்சுவை ததும்ப நீங்கள் சுட்டிக்காட்டியபோது
அவை என்மனதில்
நறுக்கென மாற்றங்களை தந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அலுவலகத்தில் மட்டுமே நீங்கள்
போதனாசிரியன் அல்ல
எங்களின் பேராசான் நீங்களே
வாழ்வின் சகல அம்சங்களிலும்

நல்லதை கெட்டதை பகுத்தறிந்து
எமக்கு ஊட்டடியவர் நீங்கள்

உங்களது இறுதிக்கணங்களில் நானில்லாத
குறையை போக்கி மகனென்ற ஸ்தானத்தில்
தந்தைபோல் உங்களை அக்கறையுடன்
கவனித்து பரிவு செய்த அக்காவின் கணவர்
மைத்துனர் துஸ்யந்தனுக்கு எனது
கோடி நன்றிகள்

"பார்த்தீபா! நீ இங்கில்லாத குறை
எனக்கு தெரியவில்லை.உன் அத்தான்
மருமகனாக மட்டுமல்ல என் மகனாகவே நின்று
எனக்கான கடமைகளை செய்கிறார்"
என்று நெஞ்சார என்னிடம் நீங்கள்
பகிர்ந்த வார்த்தைகளை எப்படி மறப்பேன்?

என்னை என் மனைவி மக்களை
மேலிருந்து ஆசிர்வதியுங்கள் அப்பா
இனி நானோ உளமார்ந்த
என் நினைவுகளில்
உங்களுடன் வாழ்வேன்

**மகன் பார்த்தீபன் மருமகள் முத்தழகி**
**பேரன் லக்சாந் பேத்தி லக்ஷிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவே....!

இன்னும் தான் நின்று விடவில்லை அப்பா
உங்களுக்காக என் விழி சுரந்த கண்ணீர்.

என்மகனுக்கு தார்மீகன் என பெயரிட்ட போதும்
வீட்டிற்கு பணிலம் என பெயரிட்டபோதும்.
உங்கள் இலக்கிய ஆர்வமது எங்கள்
வாழ்வின் இலக்கணமானது.

உங்களின் பாடும் திறன் கண்டு வியந்தவள் நான்.
அலுவலக நிகழ்வொன்றில் நீங்கள் பாடிய
“சின்னப் பெண்ணான போதிலே” பாடல்
பாராட்டுக்களை பெற்றதை
உங்கள் நண்பர்கள் சொல்லக் கேட்டு
அகமிக மகிழ்ந்தோம்.
பாராட்டுக்களில் சற்றும் மயங்காத
பண்பாளனன்றோ நீங்கள்.
உங்களது செல்லப்பிள்ளை நான்
கடைக்குட்டி.
உங்களைச் சீண்டிச் சீண்டி
நான் செய்த குறும்புகள்...
கோபமென்பதே அறியாத
குணக்குன்று நீங்கள்தான் அப்பா.

இனி எங்கு..? என்று..?
எப்போது உங்களைக்காண்பேன்?
தெய்வத் திருவடி சேர்ந்தீர்கள்
எங்களை
தெய்வமாயிருந்து காப்பீர் அப்பாவே.

**மகள் துவாரகா மருமகன் அருண்**
**பேரன் தார்மீகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தா என்றழைக்க...

அன்பான தாத்தா உங்கள்
அருகிருந்து மடி தவழ்ந்து வளர்ந்தவள் நான்.
நீங்கள் முதன் முதல் கண்ட பேரப்பிள்ளை.

அம்மா அப்பா அம்மம்மா
அனைவருடன் நானும்
ஒன்றாக உங்களுடன் இருந்தோம் - உங்கள்
உயிர் பிரியும் வரை.

வீட்டில் எனக்கு நீங்கள் நல்ல நண்பன்
விடைதெரியா வினாக்களின்
சந்தேகம் தீர்க்கும் நல் ஆசான்.

ஆங்கிலத்தில் என்னை
ஆர்வம் கொள்ள வைத்தீர்கள்
வீம்பாக நான் செய்த சில
விரும்பாத சண்டைகளில்
என் பக்கம் நின்று.. எனக்காய்
வாதிட்ட வழக்குரைஞர் நீங்கள்.
தண்டனைகள் வழங்காத நீதிபதி.
வீட்டில் நான் ஆடும் எனது நடனத்தை
பார்த்து ரசித்து குதூகலத்தில்
கை தட்டுவீர்களே. இனி
யார் இவற்றை எனக்கு செய்வார்.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா !
நீங்கள் கூறிய அறிவுரை வார்த்தைகள்
இன்னும் என் செவிகளில்..
என்னைப் பற்றிய உங்கள் கனவுகள்
நான் ஒரு வைத்தியராக வேண்டும் என்ற
எதிர்பார்ப்புக்கள். எல்லாம்
என் மனதிலே உண்டு
அவற்றை நிச்சயம் நிறைவேற்றுவேன்.

தாத்தா என்றழைக்கும்
உறவு இனி எனக்கில்லை


இருந்தாலும்
என்னுடைய எதிர்கால உச்சங்களில்
உங்களது ஆசி எப்போதும்
எனக்கு இருக்கவேண்டும்.
என் அன்பான தாத்தாவே.

**பேத்தி துஸ்யந்தன் மானசிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருமணத்தின்போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் போது மாமனாருடன்



மூத்த மகளின் திருமணத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த மகளின் திருமணத்தின் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனும் மருமகளும்



இளைய மகளின் திருமணத்தின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய மகளின் திருமணத்தின் போது



பேத்தி மானசிகாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேத்தி மனாசிகாவுடன்



மகனின் குடும்பம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்புக்கள் இல்லை எனக்கு இனி.

உறவு முறையில் அக்காவின் கணவர். 'அத்தான்' என உங்களை வாய்நிறைய அழைப்பேன். ஆனால் என்னை 'தம்பி' என்றே அன்பொழுக நீங்கள் அழைப்பீர்கள்.

சிறுவயதில் எனது இளைய பொழுதுகள் உங்களுடன் ஒரே வீட்டிலேயே கழிந்த மகிழ்ச்சியான தருணங்களை இன்னும் மீட்டிப் பார்க்கின்றேன். மறக்கமுடியாதவை அவை.

உங்களது தன்மைகளில்... பழகும் விதங்களில் பெரியவரை மட்டுமல்ல சிறியவருக்கும் உரிய இடமளித்து மரியாதையுடன் அதே சமயம் வெளிப்படையாக கலகலப்பாக வஞ்சமின்றி பழகுகின்ற உங்களது உயர்ந்த பண்பைக் கண்டு ஆச்சர்யப்பட்டவன் நான். எங்களது குடும்ப உறவுகளிடையே என்றுமே உங்களுக்கு உயர்ந்த இடமிருந்தது.உறவுகளுடன் நண்பர்களுடன் சுற்றம் சூழ உள்ள அயலவர்களுடன் ஊர்ப்பிறந்தவர்களுடன் எப்படி அன்பாக மரியாதையாக பழகவேண்டுமென்பதை உங்கள்மூலம் உணர்ந்து கொண்டேன்.அப்படி ஒரு எளிமையான இனிமையான சுபாவம் உங்களுடையது.

ஒருவன் வாழ்க்கையில் நல்ல செல்வம் புகழ் இவற்றை பேறாக கொண்டு சிறப்பாக வாழலாம். ஆனால் எவன் ஒருவன் வாழ்வில் மற்றவர்களால் நல்லவன் என பெயரெடுக்கின்றானோ அவனே யாவரையும் விட உயர்ந்தவனாகின்றான். அப்படி பெயர் எடுப்பது என்பது ஒன்றும் எளிதல்ல. அதற்கான அறிவு பண்பு உண்மை நேர்மை அடக்கம் என்பன அந்த நிலைக்கு ஒரு மனிதனை உயர்த்தி விடுகின்றன. இதற்கெல்லாம் உதாரணமாக வாழ்ந்தவர் நீங்கள்.ஏன் இதனை குறிப்படுகிறேன் என்றால் ஒரே ஒரு காரணத்தை மட்டுமே என்னால் கூறமுடியும்.இதுவரை எவர் மனதையும் புண்படுத்தாத நல்லவனாக நீங்கள் வாழந்தீர்கள் என்பதே. அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சுகயீனமடைந்த காலங்களில் எங்கள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் உற்சாகமாகவே இருந்தீர்கள்.எவரையும் தனக்காக கடமைப்படுத்த விரும்பாத உங்களுக்கான எனது காத்திருப்புக்கள் அனைத்தும் இன்று பொய்யாகி போக உங்கள் மெய்யுடல் நீத்து எமை விட்டு பிரிந்திருக்கிறீர்கள்.

மட்டுநகர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக ஒவ்வொரு மாதமும் வருகின்ற உங்களுக்கான எனது பஸ்நிலைய காத்திருப்புக்கள்.. கிளினிக் இலக்கத்திற்காக அதிகாலையே சென்றுவிடுகின்ற வைத்தியசாலையில் உங்களுக்கான எனது காத்திருப்புக்கள்... இனி எனக்கு இல்லை. இறுதி நாட்களில் உங்களுக்கான எனது கடமைகளை செய்துவிட்ட மனநிறைவு எனக்கு.

அத்தான். போய்வாருங்கள்..நீங்கள் என்றும் எங்களுடனே இருப்பீர்கள்..இனிவருகின்ற எல்லா மகிழ்ச்சியான தருணங்களிலும் எங்களுடன் கூடவே இருப்பீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களுக்கான ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் நான்.. உங்களது மைத்துனரென்ற தம்பி ராஜன்.



**மைத்துனன் சேதுபதிப்பிள்ளை கிருஷ்ணதேவராஜா**

**மனைவி ஜமுனாதேவி, பிரகாந், பிருத்திவி, பிரவீந்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் நிலைத்து வாழும் அங்கிள்

"இன்பம் துன்பம் இரண்டுமே இறைவனின் பரிசுதான்

இரண்டு துன்பங்களுக்கிடையில் வருவதே இன்பம்"

மரணம் என்பது இவ்வுலகில் தவிர்க்க முடியாதது மட்டுமன்று நாம் பிறந்தபோதே உணரப்பட்டதுமாகும். என்றும் நம்மால் அங்கீகரிக்க முடியாத ஒரே காரியமும் அதுதான்.

எங்களது குடும்பத்தினருடன் அன்பில் இணைந்து கொண்டார்.அவர் குடும்பத்துடனும் எம் உறவுகளுடனும் வாழ்வாங்கு இனிது வாழந்தவர்.

அமரர் அவர்கள் இறப்பதற்கு ஒரு கிழமைக்கு முன் ஒருநாள் காலையில் சுகயீனமுற்று மாலையில் சுகம் அடைந்தார். அப்போது நேரிலும் தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு கதைத்தவேளை எப்போதும் கதைக்கும் நகைச்சுவையுடன் கதைத்தார்.அப்படி கதைத்து சிரித்து அதன்பின் தனது பிறந்தநாளையும் இனிதே கொண்டாடினார். ஆனால் ஆழாத்துயிலில் விரைவில் மூழ்குவார் என யாரும் நினைக்கவில்லை.

கொரோனாவின் கெடுபடியில் தானும் மாட்டாமல் மற்றவர்களையும் கொத்தணியாக்காமல் தான் செய்த புண்ணியத்தை நிலைநாட்டிச் சென்றுள்ளார்.

"பட்டமரம் தளிர் விட்டுப் தளிர்ப்பதுண்டோ

பகலவனார் திசைமாறி உதிப்பதுண்டோ"

இல்லை என்பதை மனதில் நிலை நிறுத்தி (அங்கிளுடைய) ஆத்மா சாந்தி பெற நாங்கள் அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுந்தரலிங்கம் இந்திராதேவி**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத சில நினைவுத் துளிகள்

வாழ்வில் அனுபவித்தது போதும் என்று காலனை அழைத்தீரோ இல்லை வையகத்தில் செய்த சேவை போதுமென்று வைகுந்தம் ஏகினீரோ தாங்க முடியவில்லை.

சகலன் இ அத்தான், பெரியப்பா, அங்கிள் என்று பல உறவுமுறைகளில் எங்களுக்கு உரியவராய் இருந்தீர்களே! பயந்த சுபாவம் பண்பான குணம் அனைவருடனும் அளவு கடந்த அன்பு, பாசம், பரிவு, நேசம் காட்டுவதில் சிகரம் நீங்களே. அன்பு கலந்த வசியப் பேச்சால் அனைவரையும் கவர்ந்த ஒரு மாமனிதர் நீங்கள்.பலவகையான நிகழ்வுகள் நினைவுகள் மறக்க முடியவில்லை.மீட்டுப் பார்க்கின்றோம்.

நீங்கள் அமரத்துவம் அடைந்த 31 நாட்கள் உருண்டோடினாலும் உயிரோடிருந்து எம் அனைவருடனும் பகிடியாக பல கதைகள் பேசி உறவாடி மகிழ்ந்த நினைவலைகள் பசுமரத்தாணிபோல் எங்கள் உள்ளங்களில் பதிந்துள்ளன. உங்களின் பூதவுடல் அழிந்தாலும் புகழ்ச்சுடர் என்றும் ஒளிவிட்டு பிரகாசிக்கும்.

நிறைவான நித்திய வாழ்வைப் பெற்று உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தி பெற வேண்டுமென இதயபூர்வமாக இறைஞ்சுகிறோம்.

**ராஜகுலேந்திரன் சாரதாதேவி குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரப்பப் பட முடியாத பெருவெற்றிடம்.

எங்கள் உறவுகளின் மத்தியில் பெரியதோர் இடைவெளிவிழுந்திருக்கிறது.அதுவோ நிரப்பப் பட முடியாத பெருவெற்றிடம்.

எனக்கோ அண்ணனாக மனைவியாருக்கு மைத்துனராக மகளுக்கோ பெரியப்பாவாக உன்னுடனான நேசங்களில் நீயிருந்தாய். குழந்தைத்தனமான உனது அன்பில் நாம் நெகிழ்ந்ததுண்டு.

மகள் பஜோவுடனான உங்கள் நேசம் அளப்பரியது.உங்களது 'மகிழ்ச்சியான' நேரங்களில் உங்களை பலவந்தமாக கைபிடித்து எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து 'ஒருத்தரும் பெரியப்பாவுக்கு எதுவும் சொல்லக்கூடாதென்று வாயில் விரல் வைத்து மகள் சொல்லும்போது அந்தக் களிப்பில்.. ரசிப்பில்.. உள்ளம் மகிழ்வீர். அந்த நேரங்களில் எதிர்ப்படும் பெரியம்மாவை சீண்டும் நோக்கில் அவரைப்பார்த்து நீங்கள் பாடும் "யாரடி நீ மோகினி" என்ற பாட்டும் அதனை ஒட்டி வெளிவருகின்ற நகைச்சுவையான பேச்சுக்களும் சிரிப்பின் எல்லைக்கே எம்மைக் கொண்டு செல்லும்.

எனது மனைவியின் தந்தையார் சுகயீனமுற்று எங்கள் வீட்டிலிருந்த வேளை நீங்கள் உங்கள் மனைவி பிள்ளைகள் சகிதம் வந்திருந்து எங்களுக்கு பெரும் உதவியாயிருந்தீர்கள்.மனைவியார் கேட்கின்ற சிறு சிறு உதவிகளை கூட மனம் கோணாமல் உடன் செய்து கொடுத்த மரியாதைக்குரிய மைத்துனராகவும் உடன்பிறவாச் சகோதரனாகவும் விளங்கினீர்கள்.அவருக்கோ அது வாழ்நாளில் மறக்கமுடியாத ஒன்றாகும். (இவை மனைவியின் பதிவுகள் ஆகும்)

குடும்ப உறவுகளில் உனது நேசம் கலகலப்பானது. வஞ்சகம் துரோகம் அவமதிப்பு நன்றியீனம் இவைகளின் அர்த்தங்களே உன்னை அணுகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைவிட வயதில் இளையவர்க்கும் உரிய மரியாதையை வழங்கும் அதேநேரம் அவர்களுடன் தோழமைமிக்க உற்றதோர் நண்பனாக பழகுவதில் உனக்கு இணை யாருமே இல்லை.கண்டிப்பு சினம் கொள்ளல் புறங்கூறல் என்பன உன்னிடமிருந்ததில்லை.மாறாக யாவரையும் அனுசரித்து நிற்கின்ற வெளிப்படையான பேச்சு நகைச்சுவை கலந்த உரையாடல் என்பன உனது அருங்குணத்தின் சிறப்பியல்புகளாகும்.

ஒரு சுகாதார அதிகாரியாக பணியாற்றியபோது உனது அலுவலகத்தில் மேலதிகாரிகளுடன் சக உத்தியோகத்தர்களுடன் சிற்றூழியர்களடன் பேதமின்றி சரிசமமாக நீ பழகுகின்ற தன்மைகளை நான் அறிவேன்.உனது நண்பர்கள் குழாத்தில் நீ ஒரு நகைச்சுவை பேச்சாளன்.

எனது தாயாரின் மைத்துனராக இருந்தபோதும் கணேசண்ணன் என உன்னை அழைப்பதில் ஒரு நெருக்கத்தை உன்னிடம் உணர்ந்திருந்தோம்.

அந்த நாட்களில் வீட்டிலிருந்த மேர்பி (Murphy) றேடியோவில் உன்னுடன் இணைந்து பாடல்களைக் கேட்ட சுகானுபவம் எனக்குண்டு.

கட்டுக்கட்டாக நீ வைத்திருந்த நூற்றுக்கணக்கான சினிமாப் பாட்டுப்புத்தகங்களில் நான் முழ்கி திளைத்ததுண்டு.

“கணேஸ் நல்லா பாடுவான் மகன். அவன பாட்டுப்பாட சொல்லுங்கடா.. அருமையா பாடுவான்”

உன்னைப்பற்றி அம்மா கூறிய வார்த்தைகள் எத்துணை உண்மை என்பதை பின்னாளில் நீ பாடக்கேட்டு நெக்குருகி நின்றவன் நான்.கல்வியில் நீ நல்ல தேர்ச்சி பெற்றவன் என்பதும் ‘உனது பிள்ளைகளின் படிப்பை கவனிடா’ என்று உரிமையோடும் கண்டிப்புடனும் அம்மா உன்னோடு பேசுவதையும் கேட்டிருக்கின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எழுதிய பல கவிதைகளை ஆர்வமுடன் படித்தவன் நான்.உன்னுள் இருந்த அந்த இலக்கிய உள்ளமானது அத்திப்பூக்களாய் சில நேரங்களில் வெளிப்படும்.ஸ்ரீதிரௌபதை அம்மன் ஆலயம் பற்றி தினகரனில் நீ எழுதிய முழுப்பக்க கட்டுரையை வாசித்தவன் நான்.அதனை எனக்கு நீ வாசிக்க தந்தபோதே உன் மேலான எழுத்தாற்றல் என்னை பிரமிக்க வைத்தது.

உனது வாழ்க்கையில் உன்னைப்பற்றி தவறாக எதிராக இதுவரையில் எந்த ஒரு மனிதனும் வாய்திறக்கவில்லை என்பதே வாழ்க்கையில் நீ பெற்ற பெரும்பெயராகும்..பெரும் பேறுமாகும்.

இன்று நீ எம்முடன் இல்லை.இனிமேல் நடக்கவிருக்கின்ற எல்லா குடும்ப நிகழ்வுகளின் போதும் நீ இல்லாத குறை உணரப்படும்.. நீ இல்லாத இடைவெளி இருக்கும்.. உனது நகைச்சுவையை ..கலகலப்பான பேச்சை நினைத்துக் கொண்டேயிருப்போம்.

கணேசண்ணனே...மனைவியின் மைத்துனரே..மகளின் பெரியப்பாவே போய்வா.. நீளும் எம் நினைவுகளில் என்றும் நீயிருப்பாய்.



**சபா சபேஷன்**

**மனைவி திருமணிதேவி**

**மகள் பஜனுகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கணம் வருவாயா..?

அன்பாகப் பேசி அதிநகைச்சுவையாய்
எம்மை மடடுமல்ல எல்லோரையும் கவர்ந்தீர்.
வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்
சிரிப்பதற்காய் உனை தேடுவோம்
'அங்கிள்' என அழைத்தாலே போதும்
அருவியாய்க் கொட்டும் பகிடிகள்
இனி எங்குதான் கேட்போம்
என்றுதான் காண்போம்!
ஏக்கமுடன் தேடுகிறோம் ஒரு கணம்
இறங்கி வருவாயா..?

கொலரா காலம் முதல் கொரோனா வரைக்கும்
உன்னோடு பயணித்தோம்
தொற்றுநொய் தடுப்பில் துல்லியமாய் உபதேசிப்பீர்.
சுகாதார வழிமுறைகள்.. தடுப்பூசிகள் என்று
உலக நடைமுறைகள் அனைத்தும்
ஒவ்வொன்றாய் எடுத்துரைப்பீர்
நம்பியிருந்தோம் நம் 'அங்கிள்' போதுமென்று
இன்று நீங்கள் எம்மோடு இல்லை
இருள் படர்ந்த ஓவியமாய் உன்னை
எங்கும் தேடுகிறோம் - ஒரு கணம்
இறங்கி வருவாயா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தந்தைக்கு நீங்கள்
உறவு மட்டுமல்ல உற்ற நண்பனாய்
வலம் வந்த இனிய பொழுதுகள்
இப்போதும் என்கண்முன்
எப்படி மறப்பது?

நாம் தந்தையை இழந்து
தவியாய்த் தவித்தபோது
தந்தையாய் எமக்கு
உறுதுணையானீர்.

எங்களின் நற்காரியங்களில்
தந்தையின் ஸ்தானத்தை
தானே ஏற்றீர் - இன்றோ
அத்தனையும் சூனியமாக
எங்குதான் விரைந்தீர்?
வேதனையில் வாடுகிறோம் ஒரு கணம்
இறங்கி வருவாயா?

மண்ணுலகு மறந்து
விண்ணுலகம் சென்றாலும் - என்றும்
கண்ணுக்குள் நிழல்படும் திருவுருவே
நீர் இறையடி சேர்ந்து
ஈடில்லா முத்திபெற
அனுதினமும் இருகரம் கூப்பி
இறைவனைப் பிரார்த்திப்போம்.

**அமரர்களான**
**சுப்ரமணியம் இராஜேஸ்வரி**
**அவர்களின் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் பெரியப்பாவிற்கு....

இதயத்தின் துாறலில் உயிர் பிழந்து போனது

நேற்றிருந்த உறவு ஒன்று இன்று முடிந்து போனது

காத்திருந்த உறவு இன்று முடிந்து போனது

கண்விழித்துப் பார்த்திருக்க

பார்த்திருந்த மரணம் பரிதவிக்கச் செய்தது

பேச்சிழந்து புலம்புகிறோம் பெரியப்பா

வார்த்தை உங்களிடம் தேடுகின்றோம்

கண்ணிருக்க மணியில்லை

காற்றிருக்க உயிரில்லை - இங்கே

உறவிருக்க நீங்கள் அருகில் இல்லை

உங்கள் நினைவோடு நாமும் வாழ்வோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய

ஸ்ரீ மனோன்மணி அம்மாளை பிரரர்த்திக்கின்றோம்.

**பெறாமகள் நிவேதினி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத இயலாத என் துயர்

ஒரு பனிமழைக் கால
மெல்லிய தூறல்களாய்
இளங்காலைப் பொழுதொன்றில்
வந்து மறையும் செம்மேகங்களாய்
உங்கள் நினைவுகள்
சிறுவயதில்
மனதில் பதிந்த உங்கள் உருவம்.

அப்பாவின் மைத்துனராய்
அன்பான மாமாவாய்
கண்டு பேசி
கழித்த பொழுதுகள்

மாய இருட்போர்வையெனும்
மரணம் வந்துங்களை போர்த்தியதே
உலக பந்தம் பாசமெல்லாம்
உண்மையல்ல என்றுணர்த்தி
நீங்கள் நடந்த சுவடுகள் அழிந்து
நினைவுகளை மட்டுமே
எமக்காய் தந்து
விடைபெற்றீர்கள்

நேரம் ஒரு நாள் எம்மை
நெருங்கி வரும் என்ற நிஜம்
புரியாது வாழும்
பொய்மைக் கோலங்களுள்
தெளிவானதொரு நீரோடையாய்
தெரிந்ததுதான் உங்கள் வாழ்க்கை

இன்னும் எழுத
இயலாத என் துயரை
எங்கள் உறவுகளிடை
ஏக்கமுடன் பகிர்கின்றேன்.

**மருமகள் திருமதி. லோஜினி விவேகானந்தராஜ்**
உதவி பிரதேச செயலாளர், லேக் வீதி. மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துக்களிலிருந்து . . .

பாண்டியூர் பெற்றெடுத்த கணேசமூர்த்தி மாமாவை படைப்பாளிகளுள் ஒருவராக உங்கள் முன் வைக்கின்றேன்.

நாங்கள் உரையாடிக்கொண்டிருக்கும்போது என்னிடம் ஒரு பையை நீட்டி " இதில் நான் எழுதியவை உள்ளன" என்றார்.ஆனால் அவை பற்றி எதுவும் விபரிக்கவில்லை.நானும் அவற்றை வாங்கி மேலோட்டமாக பார்த்துவிட்டு வைத்தேன். இன்று அவற்றை கருத்தூன்றி வாசிக்கும்போது அவர் சத்தமில்லாமல் சாதித்துள்ளார் என்பது தெளிவாகின்றது. அரு கணேஸ் என தன் பெயரைச் சுருக்கி வீரகேசரியில் 1072 என்ற அங்கத்துவ இலக்கத்துடன் கிட்டத்தட்ட 1960 - 1995 வரை சஞ்சரித்துள்ளார்.வீரகேசரி பத்திரிகையில் மட்டுமன்றி சுதந்திரன், ராதா, கதிரொளி என்ற இதழிலும் சிறுகதை உருவகக்கதை, கவிதை, அறிவியல் சார் விடயங்கள் என பல ஆக்கங்களை எளிய நடையில் மிகவும் விளங்கும் வகையில் இரத்தினச் சுருக்கமாக படைத்துள்ளார். இவரது சிறுகதைகளாக 'காவியத்தில் நானும் ஓவியம் இ விடிவெள்ளி, தொடுவானம், வேக்காடு, விரகதாபம் என்பன உள்ளன.காவியத்தில் நானும் என்பதில் இலக்கியத்தில் வரும் பாடலை நயந்து ரசித்த தன்மையை கதையாக முன்வைத்துள்ளார்.மேலும் 'பொய் நவிலும் பெண்டீர்' என்பதிலும் தான் இலக்கியத்தின் மீதுள்ள ஈடுபாட்டையும் தெளிவையும் புலப்படுத்தியுள்ளார். 'வேக்காடு' எனும் சிறுகதையில் நாம் எந்த நேரத்திலும் பண்பாட்டை மறக்கச் செய்யக்கூடாது என்பதை மாதவியை அவர் பார்த்த பார்வையூடாக சுட்டிக்காட்டியுள்ளார். 'விரகதாபம்' எனும் சிறுகதையில் தனக்கும் எழுத்துலகுக்கும் உள்ள உறவை 'நீ அல்ல நானே நினைத்தாலும் என் கலைகளிடமிருந்து என்னை பிரிக்க முடியாது' என வெளிப்படுத்தியுள்ளார். அக்கதையில் 'கலை அழிந்தபோது கலைஞன் இறந்துவிட்டான்' என முடித்துள்ளார். அவரது படைப்புக்கள் வெளிவராமைக்கும் கலைஞன் இறந்து விட்டானோ என்ற எண்ணம் எழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமிதம், அறியாமை ஆகிய உருவகக்கதைகளில் வரும் பாத்திரங்களில் அவரது சாயலை இனங்காணமுடிகிறது. 'பெருமிதம்' உருவகக்கதையில் புழு, மீன், கொக்கு, வேடன் எனும் பாத்திரங்களை படைத்துள்ளார்.இதில் கொடூரமான பாத்திரங்கள் எதுவும் இல்லை.புழு மீனிடமும், மீன் கொக்கிடமும், கொக்கு வேடனிடமும் தன்னை கொலை செய்ய வேண்டாம் என்று கெஞ்சுவதும் மறுபுறம் அவை செருக்குடன் கொலை செய்வதும் கூறப்படுகிறது. 'அறியாமை' கதையில் பகலும் பட்டமரமும் பாத்திரங்கள். இவர் தனது கதைகளிலிருந்து ஒருவரை ஒருவர் வீழ்த்துவது சரியில்லை மற்றவரை மதிக்க வேண்டும் எனும் பண்புகளைத்தான் எழுத்துக்கள் ஊடாக சித்தரித்துள்ளார்.

இயற்கை, பண்பாடு, எதிர்கால நோக்கு என்ற அடிப்படையில் 'இயற்கை தரும் இன்பம் பழந்தமிழர் பண்பாடு, கலைஞனும் காலமும். மகத்துவம், எதிர்காலமும் மாணவரும், வாழ்க்கையில் விஞ்ஞானத்தின் பங்கு, நாளைய உலகின் தலைவர்களான சிறுவர்கள், சனத்தொகை வளர்ச்சி பாதிப்புகள் என பல ஆக்கங்களை தந்துள்ளார்.

அவரது ஆக்கங்களில் மனித நேயம், பண்பாடு, பாதுகாப்பு, புரிந்துணர்வு என்பன பற்றி எழுதியுள்ளார். மேலும் அங்கு உலா வரும் கதா பாத்திரங்களில் அவரையே காணமுடிகின்றது. தன் வாழ்க்கையை அமைதியான முறையில் கழித்தது போல எழுத்துலகிலும் தான் சஞ்சரிப்பதை காட்டிக்கொள்ளாமல் மறைந்து விட்டார்.

நீங்கள் மறைந்தாலும் என்னிடம் தந்ததை ஏட்டில் பதித்து விட்டேன். அவை என்றும் மறையாது.இன்று இதனை வாசிப்போர் நீங்கள் எழதியுள்ளீர்களா? என்று கேட்பது உங்கள் ஆத்மாவுக்கு சாந்தியாக அமையட்டும்.

**திருமதி வனிதா சுரேஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாத்தாவிற்கு எங்கள் உள்ளத்திலிருந்து......

சிறு குழந்தைபோல் எல்வோருடனும் ஒன்றாய் அமர்ந்து அனைவரையம் சிரிக்க வைத்து மகிழும் தாத்தா. சொல்லாமல் எமைவிட்டுப் பிரிந்தது ஏன்? புரியாத புதிராகவே உள்ளது இது. இன்றும் நீங்கள் எம்முடன் அருகிலேயே இருக்கின்றீர்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

பல நாட்கள் கழித்து ( 30.09.2021) அன்று எங்கள் வீடடுக்கு வந்தீர்கள்.ஆனால் அன்று உங்களால் வாகனத்தைவிட்டு இறங்க முடியவில்லை என்று வாகனத்திலேயே இருந்துவிட்டீர்கள்.உங்களால் வீட்டுக்குள் வரமுடியவில்லை. என்பதை நினைத்துப் பார்க்கும்போது ஏங்குகிறது மனம்.ஆனாலும் வந்ததும் வழமைபோலவே உங்கள் பேத்திகளை கண்டதும் “நோனா” என்று அழைத்தீர்கள் தாத்தா.பேரன் உங்கள் அருகில் வந்ததும் “Ahh dancer” என்றீர்களே. இனி இப்படி செல்லமாக யார் அழைப்பர் தாத்தா.?

சிறு வயதுமுதல் கிஷோவை “Chinese Kutty” என்று அழைத்ததை மறக்கமுடியுமா தாத்தா.? அன்றும் அம்மப்பாவுடன் பழைய கதைகளை, நினைவுகளை மீட்டு உரையாடிக்கொண்டே இருந்தீர்களே. அப்போது “நான் இன்னும் இரண்டு மூன்றுநாள் இருப்பேனா?” என்று கேலியும் கிண்டலுமாக கேட்டது இன்று உண்மையாகி விட்டதே தாத்தா.உங்கள் சிறுபிள்ளைத் தனம் உங்களை விட்டு நீங்கவில்லையே.

“கல்முனைப் பக்கம் வாறதில்லையா? எல்லோரும் வாருங்களேன்!” என்றீர்களே. நாங்கள் வந்தபோது எங்களோடு கதைத்து பேசி மகிழ நீங்கள் இல்லையே..

உங்களோடு நாங்கள் அனைவரும் இருந்த இனிமையான நாட்களின் நினைவுகள்.. அதில் ஏற்பட்ட உவகைகளை முடிவிலியாய் கூறிக்கொண்டே போகலாம். உங்கள் நினைவுகளை மனதில் தேக்கி வைத்திருக்கும் எங்களை துன்பத்தில் ஆழ்த்தி விட்டு

அவசரமாய் சென்றதேனோ..? அழுகின்றோம் மனதால்.ஆறுதல் கிடைப்பது எப்போது தாத்தா?

உங்கள் அன்பிற்கு ஏங்கும் பேரப்பிள்ளைகள்

**கோபிஷா கிஷோபிதா பேருஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய பயணத்தின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேசண்ணன் என்றழைத்த எங்கள் சித்தப்பா

எங்கள் அம்மாவிற்கு தாய் மாமன்மார் மூன்றுபேர். அவர்களில் கடைசி மாமா தான் அருமைக்குட்டி ஆவார். அவரது கடைசி மகனே கணேசண்ணன். அவர் எங்களுக்கு சித்தப்பா ஆவார். எங்கள் அக்காமார் சொல்லித் தந்தவாறே அவரை அண்ணன் என்றே அழைத்தோம்.

எங்கள் வீட்டிற்கு அருகிலேயே அவரும் அவரது அம்மா அப்பாவுடன் வாழ்ந்து வந்தார். கல்முனை பாத்திமா கல்லூரியில் கற்றார். நானும் அப் பாடசாலையில் கல்வி கற்ற போது ஆங்கில பாடத்தை வாசிப்பதில் பல சிரமங்கள் எதிர் கொண்டு தினமும் வகுப்பாசிரியரிடம் அடி வாங்குவது வழக்கமாகி விட்டது. இதனை அறிந்த அண்ணன் தினமும் என்னை அழைத்து ஆங்கிலம் சொல்லித்தருவார்.

சிறு வயதில் மாலை நேரங்களில் அண்ணனுடன் விளையாடுவேன். அண்ணன் ஒரு எம்.ஜீ.ஆர் ரசிகன் எம்.ஜீ.ஆரின் படங்களை வெட்டி ஒட்டி அல்பம் தயாரித்து அழகு பார்த்தவர். நாங்கள் இருவரும் கையில் கம்பை வைத்துக் கொண்டு கத்திச் சண்டை போட்டு விளையாடியது என் மனங்களில் தோன்றுகின்றது. எம்.ஜீ.ஆர் போல் கையால் இடுப்பை பிடித்து கொண்டு நீங்கள் கத்திச் சண்டை போடுவது இன்னும் என் கண் முன்னே தோன்றி மறைகின்றது.

உங்களுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்த நேரம் கமலாவை ஒருதரம் பார்க்க வேண்டுமென்ற உங்களது விருப்பத்தை என்னிடம் தெரிவித்திருந்தீர்கள். கமலாவின் அண்ணன் ராஜகுலேந்திரனிடம் சொல்லி ஒழுங்கொன்றை செய்தேன். அவ்வேளை கல்முனை தாஜ்மகால் தியேட்டரில் பக்த பிரகலாதா படம் பார்த்து விட்டு வந்த கமலாவை நாமிருவரும் மறைந்திருந்து பார்த்தது கூட ஞாபகம் வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை "சின்னவா" என்று அழைப்பது அன்று தொடக்கம் நீங்கள் மரணிக்கும் வரை இருவர் மாத்திரமே. ஒன்று எங்கள் மூத்தக்கா மற்றது நீங்கள். இன்று அந்த குரல்கள் இரண்டும் மறைந்து ஊமையாகி விட்டன.

உங்களுக்கு திருமண நாள் நிச்சயிக்க பட்டுவிட்டது. "சின்னவா என்ன உடை வைத்திருக்கிறாய் திருமணத்திற்குப் போட" என்றாய். அண்ணன்... வழமைபோல் காற்சட்டையும் சேட்டும் தான் என்றேன். ஒரு புன்சிரிப்புடன் அறைக்குள் சென்ற நீங்கள் ஒரு நீளக்காற்சட்டையுடன் வந்து இதை தான் நீ போடவேண்டும் என்று சொன்னீர்கள். நானும் பெரிய மகிழ்ச்சியுடன் அதனைப் போட்டு கொண்டு உங்கள் திருமண நிகழ்வில் கலந்து கொண்டேன். எனது வாழ்க்கையில் முதன் முதலாக நீளக்காற்சட்டை அணிந்தது உங்களது திருமணத்திற்காகத் தான் இது என் வாழ்வில் மறக்க முடியாத சம்பவமாகிவிட்டது.

அண்ணனின் முகத்தில் ஒரு நாளும் கோபத்தை நான் கண்டதில்லை. அப்படி வந்தாலும் நீண்ட மௌனம் தான் அங்கு நிலவும்.

அண்ணன் மாதத்தில் ஒரு தரம் எனது வீட்டிற்கு வருவார். வரும்போது ஒரு பப்பாசிப்பழத்துடன் வருவார். பல சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொள்வார். மனதில் ஏற்படும் கவலைகளை என்னிடம் பகிர்ந்து கொள்வார். நானும் சில ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுவேன். ஏதும் வேண்டுமா எனக் கேட்டால் அதற்கு ஒரு புன்சிரிப்புத் தான் பதில். அவர் வீட்டுக்கு போகும் சந்தோஷத்துடன் போவார். எனக்கு அது மிகுந்த மன நிறைவைத் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் யாரிடமும் மனம் திறந்து எதையும் கேட்க மாட்டார். குறிப்பால் நாம் உணர்ந்து எதையாவதைக் கொடுத்தால் ஏற்றுக் கொள்வார். நான் ஒரு நாள் அவர் வீட்டிற்கு போனபோது எதையும் வாங்கிப் போவதில்லை. அண்ணனிடம் கேட்டேன் எதுவும் வேண்டுமா என்று. பதில்லை. என்ன பால் குடிக்கிறீர்கள் என்று கேட்டேன் எந்த விதமான தயக்கமின்றி பாலின் பெயரைச் சொன்னார். நான் நாளை வாங்கிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டேன். மறுநாள் அதனை வாங்கி கொண்டு அவர் வீட்டுக் போனேன். மிகுந்த சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டார். சிறிது நேரம் பேசிவிட்டு வந்து விட்டேன். அது தான் எனக்கும் அண்ணனுக்கும் இடையில் ஏற்பட்ட இறுதிச் சந்திப்பாகும்.

2021.10.14 அன்று எனது கணனியில் முகப்புப் புத்தகத்தைப் பார்த்தபோது பார்த்தீபன் அண்ணனின் திருமணப் போட்டோக்களை பதிவேற்றம் செய்திருந்தான். 2021.10.12 அன்று பிறந்த நாள் கொண்டாடியுள்ளார். அண்ணனின் பிறந்த நாளுக்குப் போகவேண்டும் என எண்ணியிருந்த எனக்கு அவரது மரணச் செய்தி தான் கிடைத்தது.

சின்னவா நான் மரணித்துப் போனால் நீதான் எனது மரணச் சடங்கை முன்னின்று நடாத்த வேண்டும் என்று சொல்லி இருந்தீகள். நீங்கள் மரணித்த நேரம் நானும் சுகயீனமடைந்து இருந்தேன். என்னால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. ஆனாலும் உங்கள் இறுதிக் கிரிகைகள் ஏனையவர்களின் பங்களிப்புடன் இனிதே இடம் பெற்றது மன நிறைவைத் தந்தது.

*அண்ணா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்*

என்றும் உங்கள் சின்னவன்

**கதிர்காமநாதன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். அருமைக்குட்டி கணேசமூர்த்தி அவர்களுக்க ஓர் இரங்கல்.

*ஆழ் மனதிலிருந்து . . . .*
*இறப்புக்கள் இயற்கையின் நியதி.*
*ஆனால் நினைவுகளுக்கு என்றுமே இறப்பில்லை.*

புகழ் பூத்த நாகமணி தோம்புதோர் குடும்பத்திற்கு எட்டு வாரிசுகள். நான்கு ஆண்கள் நான்கு பெண்கள். அதில் பெண்களில் மூத்தவர் தங்கப்பொன். அருமைக்குட்டியை மணம் புரிந்து பிறந்த இருவரில் ஒருவர் அமரர். கணேசமூர்த்தி. எப்போதும் சிரித்த முகம், வம்பு தும்புகளுக்கு செல்லாத இயல்பு, உறவுகள் என்றால் ஓடி வந்து உதவும் பண்பு இவ்வியல்புகளைக் கொண்டிருந்த கணேஸ் கல்வி கற்று பொதுச் சுகாதாரா பரிசோதகராக அரசசேவையில் இணைந்து சுகாதார கல்வி அதிகாரியாக ஓய்வு பெற்றார். கடமையை கண்ணியமாக செய்தார். தவறுகளுக்குத் துணைபோகாதவர். உரிய பருவத்தில் செல்வ செழிப்பு மிக்க சேதுபதிப்பிள்ளையின் புத்திரியான கமலாதேவியை மணம் புரிந்து மூன்று புத்திர செல்வங்களுடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார். எனது இளமைக் காலத்தில் அவருடன் பழகிய நினைவுகள் இன்றும் பசுமையாக உள்ளன. அப்போதெல்லாம் உறவுகளுக்குதான் முதலிடம். இன்றைய யுகம் உறவுகள் எல்லாம் தூரமாகிவிட்டன பாண்டிருப்பு தீப்பள்ளயம் என்றால் எமக்கு கொண்டாட்டம். அப்போதுதான் பெரியம்மாவின் வீட்டுக்கு வந்து தீ மிதிப்பு வரை தங்கி நின்று செல்வது எமது வாடிக்கை. வயிறார உணவு, கலகலப்பு பேச்சு, மனம் நிறைந்த மகிழ்ச்சி அதில் அவரின் பங்களிப்பு எல்லாமே அடி மனதில் ஆழமாக பதிந்து இருக்கின்றது. இறந்தவர் என்றுமே திரும்பி வரப்போவதில்லை.

*அன்னாரின் ஆன்மா ஆன்ம ஈடேற்றம் பெற பிரார்த்திக்கும்*

**ச. சிவானந்தராஜா**
**உடன் பிறவா சகோதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறாது மறையாது

மண்ணுலகில்
வாழ்வாங்கு வாழ்ந்து
விண்ணுலகு ஏகி..
அமரத்துவமடைந்து விட்ட — எங்களது
அருமைக்குட்டி கணேசமூர்த்தி அண்ணாவை
அஞ்சலிக்கின்றேன் கண்ணீரால்!

பாண்டவர் இருப்பாம்
பாண்டியூரைப் பிறப்பிடமாகவும்
நற்பிட்டிமுனையூரை வசிப்பிடமாக்கியும்
நற்பண்புகளுக்கு நல்லுதாரணமாய்த் திகழ்ந்த
நல்மாந்தர் குலத்தின்
குலவிளக்கு நீங்கள்
குமைந்து கனக்கிறது என்னிதயம்
உம்மோடு இணைந்து பழகிய நாட்களை எண்ணி..

நெஞ்சக் குளத்தில் 'கமல'த்தையிருத்தி
குறையொன்றுமில்லாமல்
கறையேதுமின்றி
கல்யாண பந்தத்திலும்
களிப்புடன் வாழ்ந்து மூன்று செல்வங்களை ஈன்ற
கபடமில்லா பொன்மனச்செம்மல் நீங்கள்
காலனிடம் விரைந்ததேனோ..? எனக்கோ
கண்ணீரை சொந்தமாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார கல்வி அலுவலராய்
பணிசெய்யவில்லை நீங்கள்.. ஆனால்
அதனையே சுவாசமாக்கி வாழ்ந்து
செம்மையாய் சேவையாற்றிய தொண்டன்.

சேவையின் இலக்கணமே
சோர்ந்து துவழுதண்ணா என்னிதயம் - உம்மோடு
சேர்ந்து பழகிய நாட்களை எண்ணி

அன்போடு பண்பையும் இணைத்து
பார்போற்ற வாழ்ந்த
பெருமகனே அண்ணாவே
கொடுத்துதவும் குணத்தின் வடிவாய்
குவலயத்திலிருந்த குணமகனே!
நாட்கள் மாதங்களாகியென்ன
மாறாது மறையாது உந்தன்
நினைவும் திருவுருவும்
எந்தன் இதயத்தை விட்டு.

அமரத்துவம் அடைந்துவிட்ட எந்தன்
ஆருயிர் அண்ணாவே
அனுதினமும் அஞ்சலிப்பேன் - உந்தன்
ஆத்ம சாந்திக்காய்.

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அன்புத் தம்பி
**கனகசூரியம் கணேசமூர்த்தி**
தாதிய உத்தியோகத்தர்
நற்பிட்டிமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேசண்ணனின் நினைவலைகள்

'அன்பகத்து இல்லா உயிரவாழ்க்கை

வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று"



( திருக்குறள்)

மனதிலே அன்பு இல்லாத உயிர் இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்வதற்கு வலிய பாறை நிலத்தில் ஈரம் வற்றி உலர்ந்த மரம் தளிர்த்தாற் போன்றதாகும் எனும் பொருளுக்கு நிகராக வலியபாறை நிலத்தில் ஈரம் வற்றி உலர்ந்த மரம் தளிர்விட்டது போலன்றி உள்ளம் நிறைந்த அன்புடன் ஈர நிலத்திலே தளைத்துச் செழித்த பசுமை மரம் போன்று உறவுகள் அனைவரிடத்தும் அன்பு செலுத்தி பாசத்தைக் காட்டி அரவணைத்து வாழ்ந்த எமது அருமைச் சகோதரன் அருமைக்குட்டி கணேசமூர்த்தி எண்பது வருடங்கள் (80) இல்லற ஈடுபாட்டுடன் இணைந்து வாழ்ந்த காலங்கள் ஈடு செய்ய முடியாதவை.

எமது குடும்பத்தின் உறவில் பெரியம்மா குடும்பத்துடன் நாங்கள் கொண்டிருந்த உறவு உடன்பிறந்தவர்களும் கொண்டிருந்ததில்லை.இரத்தப் பரிசோதகராக பாலமுனை வைத்திய சாலையில் நியமனம் பெற்ற காலம் முதல் சுகாதார கல்வி அதிகாரி வரை பல பதவி உயர்நிலைகளைப் பெற்று எந்தப் பிரதேசத்தில் கடமையாற்றினும் அக்கரைப்பற்றிலுள்ள எங்கள் வீட்டிற்கு "அன்ரி" என்று அழைத்தவாறு உரிமையுடன் உள்நுழையும் உங்கள் அன்பான தோற்றம் இன்னமும் எங்கள் மனக்கண்முன்னே வந்து நிற்கின்றது. பெண் சகோதரங்கள் உங்களுடன் உடன்பிறவாத போதிலும் உங்கள் சிறிய தாயின் பிள்ளைகளான எங்களை பாசத்துடனும் பரிவுடனும் பரிகாசங்கள் செய்து பழகிய நாட்கள் இன்றும் பசுமையாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீப்பள்ளயம் வந்துவிட்டால் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே எங்களை அழைத்துச் சென்று அன்புகாட்டி உங்கள் உடன்பிறப்புகள் போன்றே பாசம் காட்டி பாரமரித்த நாட்களை நாங்கள் இன்னமும் மறக்கவில்லை. அதற்கும் மேலாக குடும்பங்களில் ஏற்படுகின்ற பிரச்சனைகளின் போதெல்லாம் ஆறுதல் வார்த்தைகள் கூறி கலங்க வேண்டாம் 'அண்ணன் நான் இருக்கின்றேன் என்று உதவும் கரங்களாய் எம்மை அரவணைத்து "இதுவும் கடந்து போகும்"எனும் நம்பிக்கையையும் ஊட்டி ஆதரவுகாட்டிய அன்பான அண்ணன் இன்று எம்முடன் இல்லை எனும் ஏக்கம் எங்கள் அனைவருக்கும் நிலையாகவே இருக்கும். தொழில்துறையில் களங்கமற்ற ஓர் கடமையாளனாக தடம் பதித்தவன் நீ. பழம்பதியூராம் பாண்டிருப்பை பிறப்பிடமாக கொண்ட போதிலும் கரம்பிடித்தவள் பதியாம் நற்பிட்டிமுனையை வதிவிடமாக கொண்டு நீண்டகாலம் வாழ்ந்திட்டீர். அருமைப்பிள்ளைகளாம் செல்லமாய் அழைக்கும் பெரியகுட்டி (சுரேனுதா), சின்னகுட்டி (துவாரகா) எனம் இரு பெண்பிள்ளைகளையும் பார்த்தீபன் எனும் ஓர் ஆண்மகவையும் ஈன்றெடுத்த களிப்பில் சிறந்ததொரு வாழ்வை வாழ்ந்து காட்டி இன்று வானகம் சென்றுவிட்டீர்கள்.குறையேதும் உங்களுக்கில்லை எனலாம்.பிள்ளைகளை வாழவைத்து பேரப்பிள்ளைகளை கொஞ்சிக்குலாவி அகமகிழ்ந்து வாழ்ந்து விட்டீர்கள்.

"மரணத்தினால் சில கோபங்கள் தீரும்

மரணத்தினால் சில சாபங்கள் தீரும்

வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்

விதை ஒன்று வீழந்திடில் செடி வந்து சேரும்".

எனும் கவிப் பேரரசு வைரமுத்துவின் வாழ்வின் தத்துவ வரிகள் அனைவருக்கும் பொதுவானதே.நீங்கள் இன்று இல்லாமல் விதையானபோதும் மீண்டும் ஒரு கணேசனாக அவதரிக்க அவனருளை வேண்டுகின்றோம்.

**திருமதி. சாந்தினி குணாளன்**

அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரனின் இரங்கல்

பாண்டிருப்பெனும் பதியினிலே ஊற்றெடுத்து நற்பிட்டிமுனையிலே கரம் பிடித்து கருத்தொருமித்து வாழ்ந்து காட்டிய கணேஷ் அண்ணாச்சியே! கணேசமூர்த்தி என்னும் நாமமும் கொண்டு அக்கணேசனுக்கேற்றாற் போலவே வாழ்ந்து காட்டினாயே காலம் உள்ளவரை உன்னை நான் எப்படி மறப்பேன்.?

கட்டிய மனைவியடனும் பெற்றெடுத்த மக்களுடனும் கலக்கமே தெரியாமல் கச்சிதமாய் வாழ்ந்த உன் வாழ்வை காலனவன் கவர்ந்தெடுத்து எம்மனைவரையும் கவலையில் ஆழத்தினான்.நீ வாழ்ந்த வாழ்வு எம் வாழ்வு இருக்கும்வரை என்றும் எம் மனதில் இயம்பப்படுமே என் சகோதரா!

அண்ணனாய் இருந்தாலும் நீ பழகியது தோழனாய் தானே!நேர்சிந்தனையும் நகைச்சவையும் கொண்ட உன் பேச்சுக்களும் புன்முறுவலித்த உன் திருமுகமும் எம் இதயத்தில் ஓடோடிக்கொண்டிருக்கிறதே. நீ தொழிலில் காட்டிய சீரிய பணியால் எம் சுற்றமும் பெற்றது புகழ்தனையே.

உறவுகளை ஒன்று சேர்த்து பண்பாக பழகும் மகா வித்தை கொண்ட மாமனிதரய்யாநீ!. பார் உள்ளவரை உம் நினைவு எம்மைவிட்டு நீங்காதய்யா!உன் நினைவு மற்றும் செயல்களினால் எம் உள்ளமே எமைத்தேற்ற நித்தமும் எமை ஆசிரவதித்து நிம்மதி தருவாயே என் சகோதரா!

*உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.*

உடன் பிறவா சகோதரர்கள்

**த.சிறிசுந்தரேசன் த.மகேசன் த.சிறிநிவாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இருக்கும் வரை என் நினைவில் நீ இருப்பாய்.

எனது நண்பன் என்றாலும் எனது மூத்த சகோதரன் ஒருவன் என்றாலும் என் மேல் பாசமுள்ள ஒரு உத்தியோகத்தர் என்பதில் கணேசமூர்த்தியை தவிர நான் பிறிதொருவரை நினையேன்.

பற்பல நினைவுகள் எல்லாவற்றையும் என்னால் இங்கே உள்ளடக்க முடியாவிட்டாலும் ஒரு சில நினைவுகளை நான் இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

1971-1972 காலப்பகுதியில் களுத்துறையில் சுகாதார பரிசோதகர் பயிற்சிநெறியின் போதே நாம் அறிமுகமானோம்.பயிற்சி நெறியின் பின்னர் நியமனம் பெற்று பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றினோம்.

அவர் சுகாதார கல்வி அதிகாரியாக மட்டக்களப்பு RDHS காரியாலயத்தில் பணிபுரிந்தபோதே அவரோடு எனக்கு நெருக்கமாக பழகும் வாய்ப்பு கிடைத்தது.அப்போது நான் மலேரியா பிராந்திய வைத்திய அதிகாரி காரியாலயத்தில் வேலைசெய்தேன்.இரண்டு காரியாலயங்களும் அருகருகே அமைந்திருந்தமையால் அவருடனான எனது நட்பு மேலும் நெருக்கமானது.

அந்த நாட்களில்தான் மட்டக்களப்பில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. அப்பயிற்சிநெறியை வெற்றிகரமாக நடாத்துவதில் எங்கள் பயிற்றுவிப்பாளர் குழுவில் இடம்பெற்றிருந்த கணேசமூர்த்தி அவர்கள் முன்னின்று உழைத்தார்.பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் வளப்பற்றாக்குறைகள் காணப்பட்டதால் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தோம். ஒருநாள். பயிற்சிநெறியின் இணைப்பாளராக செயல்பட்ட என்னிடம் கணேசமூர்த்தி அவர்கள் சொன்ன வார்த்தைகளை இன்றும் என்னால் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி நீ இந்த பயிற்சி நெறியை நடாத்துவதற்கு மிகுந்த சிரமப்படுவதாக தெரிகிறது.நீ எனக்கு மிகவும் நெருக்கமானவன் என்பதால் என்னால் இயன்ற முழு உதவிகளையும் செய்கிறேன்" என்றார். அப்படி கூறியவை வெறும் வார்த்தைகள் அல்ல என்பதை அவர் முழுமூச்சாக நின்று பல உதவிகள் செய்து அதனை வெற்றிகரமான செயற்பாடாக்கி நின்றபோது நான் உணர்ந்து கொண்டேன். ஆம் சொன்னபடி தன் வார்த்தைகளில் நின்றதை எப்படி என்னால் மறக்க முடியும்.

காலங்கள் உருண்டோடின. இருவரும் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தபோதும் சுகாதார துறைசார்ந்த சில அரசசார்பற்ற நிறுவனங்களில் சேர்ந்து பணியாற்ற சந்தர்ப்பங்கள் அமைந்தன.இறுதியாக TEDA என்ற

நிறுவனத்தில் இணைந்து கணேசமூர்த்தி அவர்கள் அம்பாரை மாவட்ட பொறுப்பாளராகவும் நான் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளருமாக செயல்பட்டோம். இந்த TEDA நிறுவனத்தில் சேர கணேசமூர்த்தி அவர்கள்தான் எனக்கு உதவிபுரிந்தார். அவர் மூலமே இந்நிறுவனத்தில் இணையும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

என்றுமே அவர் கோபப்பட்டதை நான் காணவில்லை. எப்போதும் இன்முகம் தாங்கியே அவர் எங்களுடன் பணியாற்றினார்

மாற்றம் ஒன்றே மாறாதது என்பர்.பிரிந்தவர் மீண்டும் வருவதில்லைத்தான். அவரோடு இணைந்த உற்றார் உறவினரும் நண்பர்களும் இருக்குமட்டும் கணேசமூர்த்தி அவர்களின் புகழ் பேசப்படும்.

முடிவாக ஒன்று " நான் இருக்கும்வரை என்நினைவில் நீ இருப்பாய்"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இ.நமசிவாயம்**

Ex.SPHI.Health Coordinator Regional Training Centre

Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்று வா நண்பா

அன்பு நண்பா! நீ அமரத்துவம்
அடைந்த செய்தி
ஆற்றொணாத் துயரைத் தருகிறது
கல்முனை ராணி ஸ்ரூடியோவில் நாங்கள்
ஒவ்வொரு நாளும் ஒன்றுகூடி வாழ்ந்த கதை
மகிழ்ச்சியும் மனநிறைவானதுமாகும்.
நண்பா கணேசா உன்னை நான்
கல்முனையில் காணும்போதெல்லாம்
உன் சைக்கிள் வரவும் வரவேற்பும்
பண்பும் பாசமும் நிறைந்ததாகும்.

நண்பா! உன்னை விட நான்
மூத்தவன்.. முதுமையில் வாழ்பவன்
முந்தி விட்டாய்.. உன்
ஆத்தியில் ஆழ்ந்து
ஆறாத்துயரில் இன்று
இரங்கித் துதிக்கின்றேன்.
கணேசா! கல்முனை ராணியில் நாங்கள்
அரசர்கள்..ஆண்டவர்கள்.
சென்று வா நண்பா
சீர்பெற்று சிறப்புற்று
வல்லோனின் அருள் பெற்றுவிட..

**கவிஞர். எஸ். முத்துமீரான்**
Attorney at Law
தமிழ் மாமணி. கலாபூஷணம் .தாஜ்-அல்-அதீப். கவிகுரிசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலகலப்பான நண்பன் கணேஸ்

1970 களில் கல்முனை நீர்ப்பாசன திணைக்களத்தில் நான் தொழில்நுட்ப உத்தியோகத்தராக பணியாற்றிய காலத்தில் அமரர் நடேசபிள்ளையும் எனது சக உத்தியோகத்தராவார்.அமரர் அருமைக்குட்டி கணேசமுர்த்தி அவர்கள் முதன்முதலில் நடேசபிள்ளை மூலமே எனக்கு அறிமுகமானார். அப்போது மாலைவேளைகளில் கல்முனை ராணி ஸ்ரூடியோவின் (பின்னாளில் சிங்கம்ஸ்) முன்னால் நண்பர்கள் குழாம் கூடுவோம். அமரர் நடேசபிள்ளை அமரர் செல்வம் (சிலோன் தியேட்டர்ஸ்) ஆகியோருடன் நானும் இணைந்து கொள்ளும் நண்பர்கள் குழாத்தின் ஏனைய உறுப்பினர்களில் அமரர் கணேசமூர்த்தியும் ஒருவர்.அப்போதுதான் எங்கள் நட்பு ஆரம்பமானது.

கணேஸ் நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். அவர் விடுகின்ற 'பகிடி'களும் சிரிப்பும் இப்போதும்கூட கண்முன்னே திரைப்படமாக விரிகிறது. எப்போதும் முகம் மலர்ந்த சிரிப்பே அவரது முத்திரை. அவரது நடமாட்டம் அதிகமாக பைசிக்கிள்தான்.எங்கு கண்டாலும் பைசிக்களை நிறுத்தி அன்பாக ஓரிரு வார்த்தைகள் பேசாமல் செல்லமாட்டார். அவசரமான அலுவலாக சென்றாலும் குறைந்தபட்சம் கைகளை அசைத்தாவது நட்பை பாராட்டிச் செல்வார்.

கல்முனை சிங்கம்ஸ் ஸ்ரூடியோவின் முன்னால் கூடும் சில நாட்களில் மாலை நேரத்தை மகிழ்ச்சியாக கழிக்கும் நோக்கில் 'முசுப்பாத்தி'யும் போடுவோம். அவ்வேளைகளில் கணேசுடன் கழிக்கும் நேரம் முழுவதும் கலகலப்பாகவே இருக்கும்.

நட்புக்கு இனியவராகவும் இலக்கணமாகவும் இருந்த கணேஸ் பின்பு திருமணபந்தத்தின் மூலம் எனது உறவுக்காரராகவும் ஆகிவிட்டார்.அவரது மனைவியின் இரண்டாவது சகோதரரான அமரர் இராஜகுலேந்திரன் பொத்துவிலில் திருமணம் செய்திருந்தார். எனது அக்காவின் கணவரின் (செல்லத்துரை அபேசேகர) அக்காவின் மகள் கமலாவையே இராஜகுலேந்திரன் மணம் முடித்திருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கணேஸுடனான எனது நட்பு அரை நூற்றாண்டு காலத்தையும் கடந்தது. எல்லோருக்கும் இனியவராக வாழ்ந்த அன்னாரின் மரணச்செய்தியை தம்பி சபா சபேஷன் எனக்கு அறியத் தந்தபோது ஒரு கணம் அதிர்ச்சியடைந்தேன்.

இனிய நண்பனுக்கு இறுதி அஞ்சலி செலுத்த காலச்சூழ்நிலை அனுமதிக்காத நிலையில் அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திப்பதைத்தவிர வேறொன்றும் இயலவில்லை.

அன்னாரை அஞ்சலித்து அன்னாரின் மனைவி மக்கள் உட்பட குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களும் ஆறுதல் வார்த்தைகளும் உரித்தாகட்டும்.




**செங்கதிரோன்.**


**தம்பியப்பா**

**கோபாலகிருஷ்ணன்**

அலுவலக நிகழ்வின் போது




கதிர்ப்பு நிறுவன தலைவராக இருந்தபோது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதி பிறந்த தின நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணேஷண்ணன்

எப்படி எங்கள் கதிர்ப்பு அமைப்பிற்குள் கணேஷண்ணன் வந்து சேர்ந்தார் என்பது ஒரு புரியாத புதிராகவே இருக்கின்றது.உண்மையில் நிஜமாகவே எங்களுடைய அமைப்பிற்கும் கணேஷண்ணனின் சுபாவத்திற்கும் எதுவித சம்மந்தமும் இருக்கவில்லை.கதிர்ப்பு ஒரு கடும் போக்கான செயற்பாட்டாளர்களால் நிரம்பி வழிந்த ஒரு மக்கள் சேவை அமைப்பு என்பதுடன் பதின்ம வயதைத் தாண்டிய மற்றும் இளையவர்கள் மட்டுமே கொண்ட வட்டத்தினுள் ஒரு வெள்ளைத்தலை தென் பட்டது மிகப்பெரிய ஆச்சர்யம்தான்.

கதிர்ப்பு நிறுவனம் குறிப்பிட்ட சில காலத்திற்குள்ளேயே அசுர வளர்ச்சி அடைந்த காலகட்டங்களில் அதன் தலைமையை நிதானமாக நடத்திச் செல்வது "கழிம்பை காலில் பூசியபின் கத்திமுனையில் நடப்பதற்கு ஒப்பானது". இருப்பினும் கணேஷண்ணனின் எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு கதிர்ப்பு நிறுவனத்தின் அப்போதைய வளர்ச்சிக்கு ஒரு மைல்கல்லாகவே திகழ்ந்தது.சில நேரங்களில் கத்தியைகையில் வைத்தபடி வேலை வாங்குவது ஒரு பாணியாக இருக்கும்.ஆனால் ஒரு ஒலிவ் மரக்கிளையை வைத்து அதற்கேற்றபடி அமைப்பினரை வேலை வாங்குவது என்பதில் அவர் விற்பன்னர் என்றே சொல்லலாம்.


எமது வேலைத்திட்ட செயற்பாடுகள் சம்மந்தமாக ஜேர்மன் தூதுவராலயத்துடன் இணைந்து செயற்பட்டபோது எங்களுடன் கொழும்பிற்கு வந்து தூதுவாராலய நிர்வாகிகளுடனான கலந்துரையாடலில் பங்கேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச் செயல்பாடுகளோடு மட்டும் நின்றுவிடாமல் கல்விச் செயல்பாடுகள் இலக்கியம் சம்மந்தமான முன்னெடுப்புக்கள் விசேடமாக இலக்கிய ஒன்று கூடல் போன்றவற்றில் எங்களுடன் நின்று எங்களுக்கு சமனாக பணியாற்றியபோது அவர் ஒரு ஓய்வுபெற்ற அரச ஊழியர் என்பதை நாங்கள் அறவே மறந்து போய்விடுவோம்.

என்னிடம் "ஜனா! அடுத்ததா என்ன செய்கிற பிளான்" என்று கேட்டு நின்ற அவரது குரல் என் காதுகளில் ஓங்கி ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது.அன்னாருக்கான எனது மரியாதையுடனான அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.



**க.ஜனக்குமார்**
முன்னாள் இணைப்பாளர்
கதிர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கணேசமூர்த்தி அவர்களது
# இலக்கிய படைப்புக்கள்

| சிறுகதை | பத்திரிகை/ சஞ்சிகை வெளிவந்த திகதி |
|---|---|
| 1. புறக்கவர்ச்சி | சுதந்திரன் 07.03.1965 |
| 2. வேக்காடு | சுதந்திரன் 09.08.1964 |
| 3 தொடுவானம் | சுதந்திரன் 08.11.1964 |
| 5. விடிவெள்ளி | சுதந்திரன் 19.01.1965 |
| 6. மகத்துவம் | கதிரொளி 1966 |
| 7. அறியாமை | வீரகேசரி 1966 |
| 8. பெருமிதம் | வீரகேசரி 22.04.1964 |
| 9. விரகதாபம் | ராதா 17.07.1965 |

**கவிதை**

1. வாழட்டும் நமது இனம் சுதந்திரன் 1965

**கட்டுரை**

| | |
|---|---|
| 1.இயற்கை தரும் இன்பம் | வீரகேசரி 1965 |
| 2.பொய் நவிலும் பெண்டிர் | வீரகேசரி 1965 |
| 3.கலைஞனும் காலமும் | வீரகேசரி 1965 |
| 4.பழந்தமிழர் பண்பாடு | சுதந்திரன் 1965 |
| 5.விஞ்ஞானத்தின் பங்கு | வீரகேசரி 1965 |
| 6.எதிர்காலமும் மாணவரும் | வீரகேசரி 1965 |
| 7.காவியத்தில் காணும் ஓவியம் | வீரகேசரி 1965 |
| 8.நாளைய உலகின் நாயகர்கள் | வீரகேசரி 29.09.1991 |
| 9.ஸ்ரீதிரௌபதை அம்மன் ஆலய உற்சவம் | தினகரன் 1965 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்

அருமைக்குட்டி
தங்கப்பொன்

சேதுபதிப்பிள்ளை
மனோன்மணியம்மா

ஏரம்பமூர்த்தி

கணேசமூர்த்தி ↔ சிவராஜரெட்ணம்
இராஜகுலேந்திரன
இந்திராதேவி
கமலாதேவி
சாரதாதேவி
திருமணிதேவி
கிருஷ்ணதேவராஜா
சியாமளாதேவி

சுரேனுதா
துஸ்யந்தன்

பார்த்தீபன்
முத்தழகி

துவாரகா
அருண்

மானசிகா

லக்ஷாந்
லக்ஷிதா

தார்மீகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எற்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே.
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணி மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவொரு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு
**12.10.1941**

உதிர்வு
**21.10.2021**

## அமரர். அருமைக்குட்டி கணேசமூர்த்தி

**(முன்னாள் சுகாதார கல்வி அதிகாரி HEO)**

பாண்டிருப்பை பிறப்பிடமாகவும், நற்பிட்டிமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட அருமைக்குட்டி கணேச மூர்த்தி அவர்கள் 21.10.2021 வியாழனன்று காலமானார்.

அன்னார் பாண்டிருப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற அருமைக்குட்டி தங்கப்பொன் தம்பதிகளின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்பு கணவரும் காலஞ்சென்ற சேதுபதிப் பிள்ளை மனோன்மணியம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஏரம்ப மூர்த்தி அவர்களின் அன்பு சகோதரனும், சுரேனுதா, பார்த்தீபன் துவாரகா ஆகியோரின் அன்புத் தந்தையும், துஷ்யந்தன், முத்தழகி, அருண் ஆகியோரின் அன்பு மாமனாரும் மானசிகா, லக்ஷான், லக்ஷிதா, தார்மீகன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 22.10.2021 வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு பாண்டிருப்பு இந்து மயானத்தில் நடைபெறும் இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

110/2, பழைய மின்சார சபை வீதி
நற்பிட்டிமுனை - 03
கல்முனை.

**தகவல்: குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு நன்றிகள்

நேற்றைய பொழுதுகளை நினைவுகளாக்கி
காற்றில் கலந்துவிட்ட அமரர் கணேசமூர்த்தியின்
இறுதிக் கிரியைகளின்போது இல்லம் வந்து
எங்கள் துயரில் பங்கேற்றவர்க்கும்
வருவதற்கு வாய்ப்பின்றி தொலைபேசியில் ஆறுதல்
வார்த்தைகளை பகிர்ந்தவர்க்கும் இறுதிக்
காரியங்கள் நிறைவேற பல வழிகளில்
கடமைகளை செய்தவர்களுக்கும் அன்னார்
நோயுற்றிருந்த வேளை வைத்தியசாலைகளில் மனம்
நோகாது உதவிசெய்த வைத்தியர்கட்கும்
தாதிய உத்தியோகத்தர்கள் சிற்றூழியர்
தங்களுக்கும் மற்றுமிந்த மலரில் அமரரின்
நினைவுகளை பதிவிட்டவர்க்கும் இதனை
நேர்த்தியாய் அச்சிட்ட அச்சகத்தினருக்கும்
இன்னுமெங்கள் நினைவில் வர மறந்த
நேசர்கள் உற்றார் உறவுகள்
அனைவருக்கும் நிறைவுடன் கூறுகிறோம்.



அன்புடன் "**பெரு நன்றிகள்.**"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடவுள் கொடுத்த வரம் கிடைக்கவில்லை
கடவுளே வரமாக கிடைத்தார் அப்பாவாக..
தான் பார்க்காத உலகத்தை கூட
தன்பிள்ளைகள் பார்க்க வேண்டும்
என நினைப்பவர் அப்பா

உன்னை எதிர்பார்த்து பெற்றெடுப்பாள் அன்னை
உன் எதிர்காலத்தை கற்றுத் தருவார் அப்பா
இனி ஒரு ஜென்மம் வேண்டுமென்று நாங்கள் நினைத்ததில்லை
ஆனால் அவ்வாறு நிகழ்ந்தால்
உன் மக்களாகவே பிறக்கும் வரம் மட்டும் வேண்டும் அப்பா!

தான் கீழே இருந்தாலும் நம்மை மேலே தூக்கும் உறவு அப்பா!
வாழ்க்கையின் கஸ்டங்கள் தெரியாமல் பிள்ளைகளின் மகிழ்ச்சியில்
தன் கஸ்டங்களை கரைப்பவர்தான் அப்பா
இருக்கும் போது கற்றுக் கொடுத்ததை விட
இறந்தபின்னர் அதிகமாக
கற்றுக் கொடுக்கும் ஜீவன் அப்பா!

விக்டரி அச்சகம், கல்முனை. 0771597347

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org